2. தகவல் கோரல்

பேரவை நூலக நூல்கள் மழையால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப்பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு (குறுக்கீடு)

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையிலே உங்களிடத்திலே கொடுத்திருந்த பிரச்சினை அல்ல. வேறு ஒரு முக்கியமான பிரச்சினை. காலையிலே இங்கே வந்த உடனே நூலகத்திற்கு நான் போனேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேறு ஒரு பிரச்சினையாக இருந்தாலும் என்னுடைய கவனத்திற்கு முதலிலே கொண்டுவந்த பிறகுதான் எழுப்ப வேண்டும். எதுவாக இருந்தாலும் என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வாருங்கள்.

திரு. இளம்வழுதி: நேற்று பெய்த மழையிலே நூலகம் பூராவும் ஸ்பாயில் ஆகி இருக்கிறது. சீக்கிரமாக நடவடிக்கை எடுத்து அதை சரி செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது கவனிக்கப்படும்.

திரு. இளம்வழுதி: போன வருஷம் இப்படித்தான் 2,000 புத்தகம் பாழாகியது. வேறு ஒன்றும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது கவனிக்கப்படும்.

3. கவன ஈர்ப்பு

(அ) வடஆற்காடு—அம்பேத்கார் மாவட்ட சத்துணவு மையங்களில் ஞாயிற்றுக் கிழமைகளிலும் குழந்தைகளுக்கு உணவு அளிக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்பை மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வடஆற்காடு—அம்பேத்கார் மாவட்டத்தில் உள்ள சத்துணவு மையங்களில்

1995 மார்ச் 27]

ஞாயிற்றுக்கிழமைகளில் குழந்தைகளுக்கு சத்துணவு வழங்குவதை அரசு நிறுத்தியுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த" என்கிற பொருள் அவசரம் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

* *மாண்புமிகு திருமதி இரா.இந்திரகுமாரி:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. அப்படிப் பட்ட எந்த பதட்டமான நிலையும். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. என்பதே போதும்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

வடாற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலுள்ள சத்துணவு மையங்களில் ஞாயிற்றுக்கிழமைகளில், மையத்திற்கு வருகை தரும் அனைத்து குழந்தைகளுக்கும் உணவு வழங்கப்படுகிறது. ஞாயிற்றுக்கிழமைகளில் குழந்தைகளுக்கு சத்துணவு போடுவதை அரசு நிறுத்தவில்லை. இத்தகைய புகார்கள், பெற்றோர்களிடமிருந்தோ, பெற்றோர்-ஆசிரியர் சங்கங்களிடம் இருந்தோ அல்லது ஆசிரியர்களிடமிருந்தோ ஏதும் பெறப்படவில்லை. அனைத்து மாவட்டங்களிலும், முறையாக விடுமுறை நாட்களிலும் ஆரம்பக் கல்விக் கூடங்களில் சத்துணவும், குழந்தைகள் சத்துணவு மையங்களில் சுவையான, சூடான உணவும் (ரவை கிச்சடி) வழங்கப்படுகிறது.

முற்பகல் 11.25

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் உண்மைக்கு மாறான கருத்துக்கள் இடம்பெற்று உள்ளன. தமிகத்தில் உள்ள சத்துணவுக் கூடங்களில் துவக்கப் பள்ளிகளில் சத்துணவு வழங்குவதே கிடையாது. நான் எங்கள் மாவட்டத்தில் பல மையங்களை ஞாயிற்றுக் கிழமைகளில் பார்வையிடச் சென்றபோது அனைத்து சத்துணவு மையங்களும் மூடியிருக்கக்கண்டேன். இம்மன்றத்தில் நான் சென்ற ஆண்டு ஒரு கவன ஈர்ப்பு தீர்மானத்தைக் கொண்டு வந்து உரையாற்றுகின்றபோது மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒருநாள் கூட சத்துணவை நிறுத்தக்

கூடாது என்று கடுமையான உத்தரவு போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படி கடுமையான உத்தரவு எல்லாம் போட்டும்கூட ஞாயிற்றுக்கிழமைகளில் உணவு வழங்காமல் இருப்பது ஏழை எளிய மாணவர்களுடைய வயிற்றுப் பசியோடு விளையாடுவதற்கு சமமாகும். ஆகவே, 'கர்ம வீரர் காமராஜர் அவர்களால் துவக்கப்பட்டு, பொன்மனச் செம்மல் எம்.ஜி.ஆர். அவர்களால் விரிவுபடுத்தப்பட்ட அந்தத் திட்டத்தின் கீழ் ஞாயிற்றுக் கிழமைகளில் ஏழை எளிய மாணவர்கள் உணவு அருந்துவதற்கான ஏற்பாட்டினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறையினருக்கு எடுத்துச் சொல்லி, மீண்டும் ஞாயிற்றுக்கிழமைகளில் உணவு வழங்குவதற்கான ஏற்பாட்டைச் செய்வாரா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞாயிற்றுக் கிழமைகளில் எவ்வளவு குழந்தைகள் வந்தாலும் அந்தக் குழந்தைகள் வீட்டிற்கு திருப்பி அனுப்பப் படாத நிலையில் அனைத்து குழந்தைகளுக்கும் சத்துணவு வழங்கப்படுகிறது. அதில் எந்த மாற்றமும் இல்லை. ஆனால் ஞாயிற்றுக் கிழமைகளில் சத்துணவு வழங்கக் கூடாது என்று இந்த மாமன்றத்திலேதான் சட்டமன்ற உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் 10-4-1992-ல் உரையாற்றியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பேசுகின்றபோது சொல்லியிருக்கிறார்கள். வாரத்திற்கு ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமையில் சத்துணவு போடுவதை தாங்கள் நிறுத்தினால் 50 கோடிக்கு மேலே உங்கள் அரசுக்கு பணம் மிச்சமாகும். ஓரே கல்லில் இரண்டு மாங்காய்களை முதல்வர் அவர்கள் அடிக்கலாம். ஞாயிற்றுக்கிழமைகளில் சத்துணவும் போட வேண்டாம், அதனால் மிச்சமாகும் பணத்தை அந்தப் பணியாளர்களுக்கு குறைந்தது மாதம் 500 ரூபாய் சம்பளம் கொடுக்கலாம் என்று அவர்கள் பேசியிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் அப்படி பேசியதற்குப் பின்னாலும் இவர்கள் இப்படித்தான் இரட்டை வேடம் போடுபவர்கள் என்று அறிந்திருக்கின்ற நாங்கள் இன்றைக்கும் அந்தச் சத்துணவை வழங்கிக் கொண்டிருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அவர் மட்டும் பேசவில்லை. அவருடைய கட்சியைச் சார்ந்த இன்னொரு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இதே சட்டமன்றத்தில் பேசியிருக்கிறார்கள். " சத்துணவு போடுகிறீர்கள்; மிக்க சந்தோஷம்; சனி, ஞாயிறு கண்டிப்பாக போட வேண்டுமா என்று நீங்கள் யோசித்துப் பாருங்கள். சனி, ஞாயிறு திருட்டு நாட்கள் என்று அழைக்கிறார்கள். சத்துணவு போடுகிறவர்களே அதைத் திருட்டு நாட்கள் என்று அழைக்கின்ற காரணத்தினால், நீங்கள் அந்த நாளிலே போட வேண்டுமா என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும். மாண்புமிகு சத்துணவு அமைச்சர்

அவர்கள் எங்கள் மாவட்டத்திற்கு வந்திருந்தபோது நான் இதே கருத்தைச் சொன்னேன். அந்த ஆலோசனைக் கூட்டத்தில் அவர்கள் பதில் சொல்லும் போது புரட்சித் தலைவர் தொடங்கிய திட்டங்களில் ஒன்றைக் கூட விட்டுக் கொடுப்பதற்கு புரட்சித் தலைவி அவர்கள் சம்மதிக்க மாட்டார்கள் என்று பதில் சொன்னார்கள்.(மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இந்த செண்ட்டிமெண்ட் தேவையா" என்று இதே சட்டமன்றத்திலே அவர்கள் 1991-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9-ஆம் தேதி பேசியிருக்கிறார்கள். நீங்கள் இப்படியெல்லாம் பேசினாலும் கூட புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். கொண்டு வந்த சத்துணவுத் திட்டத்தை அழிக்கப் பார்த்தவர்களுக்கு மத்தியில் அந்தத் திட்டத்தை இன்றைக்கு விரிவாக்கி பிரதம அமைச்சராக இருக்கின்ற நரசிம்மராவ் அவர்களே பாராட்டுகின்ற அளவுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் திட்டத்தை இன்றைக்கு பார் போற்றுகின்ற அளவுக்கு, புகழ்கின்ற அளவுக்கு நடத்திக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அவர்கள் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை எந்த நாட்களாக இருந்தாலும் குழந்தைகள் சத்துணவு மையத்திற்கு வந்தால் அவர்களுக்கு உணவு அளிக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் பள்ளி மையங்கள் 2,029 இருக்கின்றன. அவற்றிலே வேலை நாட்களிலே 3,23,721 பேர் சாப்பிடுகிறார்கள். விடுமுறை நாட்களில் 1,23,291 பேர் சாப்பிடுகிறார்கள். முனிசிபல் பள்ளிகள் 121 இருக்கின்றன. அவற்றிலே 21,388 பேர் வேலை நாட்களிலே சாப்பிடுகிறார்கள். விடுமுறை நாட்களிலே 8,079 பேர் சாப்பிடுகிறார்கள். மாவட்டம் முழுவதும் பால்வாடி மையங்கள் 1,378 இருக்கின்றன. அவற்றிலே வேலை நாட்களில் 60,758 குழந்தைகள் சாப்பிடுகிறார்கள். விடுமுறை நாட்களில் 30,962 குழந்தைகள் சாப்பிடுகிறார்கள். முனிசிபல் பள்ளிகளில் 61 பால்வாடி மையங்கள் இருக்கின்றன அவற்றிலே ஏறத்தாழ 2,200 குழந்தைகள் வேலை நாட்களிலே சாப்பிடுகிறார்கள். 1,215 குழந்தைகள் விடுமுறை நாட்களிலே சாப்பிடுகிறார்கள். ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தில் 295 மையங்கள் இருக்கின்றன. அவற்றிலே 11,459 குழந்தைகள் வேலை நாட்களிலே பயன் அடைகிறார்கள். விடுமுறை நாட்களிலே 5,171 பேர் பயன் அடைகிறார்கள். ஆக வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்திலே மட்டும் 1,68,718 குழந்தைகள் பயன்பெறுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே எந்தப் பதட்ட நிலையும் அங்கே இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

முற்பகல் 11.30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: No Comments at all. அப்படியே படித்தார்கள். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நானும் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் இந்த மாமன்றத்திலே பேசியதை இங்கே எடுத்துக் கூறினார்கள். இரட்டை வேடம் போடுவது நாங்கள் அல்ல. (குறுக்கீடுகள்) காரணம், போடுவதாக.. (குறுக்கீடுகள்) போடுவதாகச் சொல்லிவிட்டு...(குறுக்கீடுகள்) போடுவதாகச் சொல்லிவிட்டு ஞாயிற்றுக்கிழமைகளில் போடாமல் இருப்பதுதான் இரட்டை வேடமே ஒழிய, நிறுத்திவிடுங்கள் பரவாயில்லை என்றுதான் கூறுகிறோமே ஒழிய, போடுவதாகச் சொல்லிவிட்டு ஏன் போடாமல் இருக்கிறீர்கள். அதுதான் இரட்டை வேடம் என்பதை நான் மீண்டும் இந்த மாமன்றத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.** என்று கூறியிருக்கிறார்கள். வேண்டுமானால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னோடு வரட்டும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்தாலும் கூட சத்துணவு மையங்களை ஞாயிற்றுக்கிழமைகளில் நான் அழைத்துச் சென்று காட்டுகிறேன். மூடிக் கிடக்கிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : * * என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அதற்கு ஏதாவது ஆதாரம் வேண்டும் அல்லவா; இது முறையல்ல. (குறுக்கீடு) * * என்ன சொல்வது சரியல்ல (குறுக்கீடு) அது அவைக் குறிப்பில் வேண்டாம். இருப்பதைச் சொல்லுங்கள் (குறுக்கீடுகள்) மற்றவர்கள் உட்காருங்கள் (குறுக்கீடு) அவர் முடித்து விடட்டும்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்ளுவது எல்லாம் தாங்களே கூட வாருங்கள், உங்களை அழைத்துச் செல்லுகிறேன்; ஞாயிற்றுக்கிழமைகளில் என்னுடைய மாவட்டத்தில் உள்ள சத்துணவு மையங்களை திறப்பதே கிடையாது. நான் கொண்டுபோய் காட்டுகிறேன், நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன். (குறுக்கீடுகள்) நான் நிரூபிக்கத் தயாராக இருக்கிறேன், கொண்டுபோய் காட்டுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்படி. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்கள் மாவட்டத்தைச் சேர்ந்த மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அப்படி அல்ல என்று சொல்லுகிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் ஒருவர் சொல்வதை நம்ப முடியுமா? மற்ற எல்லோரும் சொல்லுவது தவறாக இருக்க முடியுமா? (குறுக்கீடு) நீங்கள் சொல்லுகிறீர்கள், மற்ற எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் நீங்கள் சொல்லுவது தவறு என்று சொல்லுகிறார்கள். (குறுக்கீடு) அப்படி அரசியல் ரீதியாகச் சொல்லுவதை ஒத்துக்கொள்ள முடியாது. மற்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லுகிறார்களே; சீக்கிரமாகக் கேள்வியாகக் கேளுங்கள்.

---

* * மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

1995 மார்ச் 27]

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக யதார்த்தமான நிலையை, நான் எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற முறையில் எடுத்துச் சொன்னது எல்லாம் இந்த சத்துணவுப் பணியாளர்களுக்கு சம்பளத்தை அதிகமாகக் கொடுக்கலாம் என்பதுதான். காரணம், ஏற்கனவே ஞாயிற்றுக்கிழமைகளில் நீங்கள் சத்துணவு மையங்களை மூடிவிட்டு போடுகிறோம், போடுகிறோம் என்று சொல்லுவதைவிட்டு கண்டிப்பாக மூடிவிட்டால் சம்பளத்தையாவது உயர்த்திக் கொடுக்கலாம் அந்த ஊழியர்களுக்கு என்றுதான் சொன்னோமே ஒழிய, நாங்கள் ஒரு ஆலோசனையாக எடுத்து வைத்ததற்கு இரட்டை வேடம் போடுகிறோம் என்று சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லிவிட்டு, அறிவித்து விட்டு இன்று நீங்கள் மையங்களை எல்லாம் மூடியிருப்பது அவ்வளவு நல்லது அல்ல. ஆகவே, ஏழைக் குழந்தைகளுக்காக நான் மன்றாடிக் கேட்டுக்கொள்வது எல்லாம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனியாவது எங்களுடைய மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் (குறுக்கீடுகள்) நான் அழைத்துக் கொண்டுபோய்க் காட்டுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் தயவு செய்து சத்துணவுக் கூடங்களை திறந்து வைத்து அவர்களுக்கு உணவு அளிப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவாதம் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஞாயிற்றுக்கிழமை, சனிக்கிழமை எந்த நாளிலும் சத்துணவுக்கு விடுமுறை கிடையாது. சத்துணவு எல்லா நாட்களிலும் நடைபெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா நாட்களிலும் குழந்தைகள் எவ்வளவு பேர் வருகிறார்களோ அவ்வளவு பேருக்கும் அங்கே சத்துணவு அளிக்கப்படுகிறது. சத்துணவு இல்லை என்று எந்தக் குழந்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் திரும்பிப் போன வரலாறு கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் கேட்டால் மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் முதலமைச்சராக பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால் இந்தச் சத்துணவுக்கு அதிகமான தொகையை ஒதுக்கியிருக்கிறார்கள். 1991-92-ஆம் ஆண்டில் 271 கோடி ரூபாய் ஒதுக்கினார்கள். இன்றைக்கு இந்தத் திட்டத்திற்கு 343 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் இவ்வளவு குழந்தைகள் சாப்பிடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வேறு எந்த ஆட்சியிலும் இவ்வளவு குழந்தைகள் இதிலே பயன்பெறவில்லை. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில்தான் சத்துணவுத் திட்டத்திலே குழந்தைகள் முழுமையாகப் பயன்பெறுகிறார்கள். ஞாயிற்றுக்கிழமை, சனிக்கிழமைப் போன்ற நாட்களில் நான் மாவட்டத்தில் தான் இருக்கிறேன்.

ஆகவே போய்ப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. குறை இருந்தால் எங்களுக்குத் தெரியும். உடனடியாகத் தகவல் வரும். ஆனால் வடார்க்காடு-அம்பேத்கார் மாவட்டத்தில் எல்லா இடங்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளில் சத்துணவுப் போடப்படுகிறது. அங்கே வருகின்ற குழந்தைகளுக்குப் போடப்படுகிறது என்பதை திரு. ஞானசேரகரன் அவர்கள் ஊருக்குப்போய்ப் பார்த்துத் தெரிந்துகொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(ஆ) வேதாரண்யம் வட்டத்தில் சில பகுதிகளில் வைரஸ் நோயினால் இறால் பண்ணை இறால் குஞ்சுகள் அழிவது குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திருமதி. கே. மரியம் உல் ஆசியா அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திருமதி கே. மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம்–காயிதே மில்லத் மாவட்டம், வேதாரண்யம் வட்டம், தோப்புத்துறை, பெரியகுந்தகை, அவறிக்காடு, கோடியக்கரை போன்ற பகுதிகளில் இறால் பண்ணைகளில் வைரஸ் நோயினால் இறால் குஞ்சுகள் அழிவது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீனளத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

ஆந்திர மாநிலத்தின் நெல்லூர் மற்றும் கிருஷ்ணா மாவட்டத்தில் உள்ள கடலோர இறால் பண்ணைகள்தான் முதன் முறையாக 1994 நவம்பரில் வைரஸ் நோய் பாதிப்பிற்கு உள்ளானதாக தெரியவந்தது. தமிழ்நாட்டில், சமீபகாலமாக 1995-ம் ஆண்டு ஜனவரி முதல் நாகப்பட்டினம்–காயிதே மில்லத், தென்னாற்காடு மற்றும் வ.உ.சிதம்பரனார் மாவட்டங்களில் உள்ள கடலோர இறால் பண்ணைகள் வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. கடந்த 1994-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் மத்திய அரசின் உவர்நீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் (Central Institute of Brackishwater Aquaculture) நடத்திய கருத்தரங்கு (Workshop Oct'94) மற்றும் 1995-ஆம் ஆண்டு